### சட்டவிரோத வாகன நிறுத்துமிட

# காப்பாளர்கள் 8 பேர் கைது

## ஒருவருக்கு 30 நாட்கள் சிறை





கோலாலம்பூர், மார்ச் 11-

தலைநகர் சுற்றுப் பகுதிகளில் சட்டவிரோத வாகன நிறுத்துமிட காப்பாளராக செயல்பட்டு வந்த 5 அந்நியப் பிரஜைகள் உட்பட 8 நபர்களுக்கு கோலாலம்பூர் மாநகர்மன்ற மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சிறைத் தண்டனை, அபராதம் விதிக்கப்பட்டது.

அதில் குறிப்பாக தைக்கோ ஜாலான் என்று அழைக்கப்படும் சாலை ரௌடி நபருக்கு 30 நாட்கள் சிறைத் தண்டனை, அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை கோலாலம்பூர் மாநகர்மன்ற அமலாக்கத் தரப்பினர் மேற்கொண்ட ஓப்ஸ் ஜாகா நடவடிக்கையின் வாயிலாக இந்த 8 நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

முன்னதாக ஜாலான் துன் சம்பந்தன், ஜாலான் ஸ்ரீ ஹர்தாமாஸ், ஜாலான் பிரேமி , ஜாலான் திங்கிட் தொங் சின், ஜாலான் அலோர், ஜாலான் ராஜா அலாம் பகுதிகளில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அன்றைய தினம் 12. 30 மணி தொடங்கி இரவு 9.30 மணி வரையில் மேற்கொள்ளப்பட்ட இந்த அதிரடி சோதனையில் இந்தியாவைச் சேர்ந்த மூவர், வங்காளதேசம்- மியன்மாரைச் சேர்ந்த தலா ஒருவர் கைது செய்யப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை அவர்கள் நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்டதை அடுத்து ஒருவருக்கு 30 நாட்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. மேலும் நால்வருக்கு சிறைத்தண்டனையும் மற்ற மூவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டது என்று கோலாலம்பூர் மாநகர்மன்றத் தரப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இவர்கள் பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் கூடும் பகுதிகளில் வாகனம் நிறுத்துவதற்கு 20 ரிங்கிட் வரையில் கட்டணம் வசூலித்ததாகவும் தெரியவந்துள்ளது.